# ஊடக அறிக்கை

உடனடி வெளியீட்டுக்காக

## ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 73ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது

**2018 ஒக்டோபர் 25, கொழும்பு:** உலக மக்களுக்கான ஐக்கிய நாடுகளின் அர்ப்பணிப்பை உள்ளடக்கிய தனது அடிப்படைச் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 73ஆவது ஆண்டு நிறைவை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கொண்டாடுகின்றது.

கடந்த 63 ஆண்டுகளாக இந்த வலுவான அர்ப்பணிப்புடன் இலங்கையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், நாட்டின் முன்னுரிமை அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்வதற்காக மக்களுடன் நெருக்கமாக இணைந்து தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றது. எமது ஒருங்கிணைந்த முன்னேற்றப் பயணத்தில் இளவயதினர் மற்றும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் உட்பட அனைவரும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதே நிலைபெறு தன்மையுள்ள அபிவிருத்திக்கான 17 இலக்குகளை உள்ளடக்கிய 2030ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அர்த்தமாகும்.

இளைஞர்கள் உட்பட சகல மக்களின் தேவைகளிலும் கவனம் செலுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே யாவரையும் உள்ளடக்கும் அபிவிருத்தியைச் சாதிக்க முடியும். நிலைபெறு தன்மையுள்ள இலங்கையை உருவாக்குவதில் முன்னணிப் பங்கெடுக்கும் வாய்ப்பு இளைஞர்களுக்கு வழங்கப்படுவது முக்கியமாகும். உலகில் இன்று வாழும் மக்களில் 1.8 பில்லியன் பேர் 10 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்கள். உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய இளைஞர் தலைமுறை இதுவாகும். இலங்கையின் சனத்தொகையில் சுமார் கால்வாசிப் பங்கினர் இளைஞர்களாக இருக்கின்றனர். இலக்குகளை எய்துவது தொடர்பில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாகவும் பங்காளிகளாகவும் செயற்பட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இந்த இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கின்றது.

இளைஞர்கள் மத்தியில் காணப்படும் மகத்தான திறமைகளை உணர்ந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கல்வி அமைச்சுடன் இணைந்து நிலைபெறு தன்மையுள்ள அபிவிருத்தி இலக்குகள் செயற்றிட்டத்தை ஆரம்பித்தது. இலக்குகளை அடைவதற்கு மாணவர்களின் தலைமையிலான முன்முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம் இந்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன், நாடெங்குமுள்ள பாடசாலைப் பிளைகளின் விசேட ஒன்றுகூடல் நிகழ்ச்சியின் மூலம் இந்த வருட ஐ.நா. தினம் கொண்டாடப்படுகின்றது.

சமத்துவம், மனித உரிமைகள், மனித கௌரவம் ஆகியவற்றிற்காகப் பாடுபடும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அபிவிருத்தி, காலநிலை தொடர்பாக நடவடிக்கை, சமாதானம், கொள்கை மற்றும் புத்தாக்கம் போன்ற விடயங்களில் உதவி மற்றும் முதலீட்டை வழங்கி, எவரும் விடுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு வெவ்வேறான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பு (UNSDF) 2018 – 2022 இன் பரந்த மூலோபாய நெறிகாட்டலுடனும், ஒருமுகமான வழங்கல்களுடனும், இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது, எவரையும் கைவிடாமல் இறுதியில் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கும் விதமாக, சமாதானம், நீதி உள்ளடங்கலான சமத்துவமான அபிவிருத்தியை அடைவதில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி புரிவதை இலக்காகக் கொண்டுள்ளது.